மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி சாலை வசதி இல்லாமல் இருந்தால் இந்த கரும்பு ஆலைத் திட்டத்திலிருந்து போடுவதற்கு ஏற்பாடு செய்யப்படும். ஆனால் இந்த சாலை போடுவதன் நோக்கமே கரும்பு உற்பத்தியாளர்கள் அந்த பகுதியிலுள்ள ஆலைக்கு கரும்பை எடுத்துச்செல்வதற்காகத்தான். அதைத்தவிர வேறு வகையில் இதைப் பயன்படுத்த முடியாது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

தென் மாவட்டங்களில் பயிராகும் மிளகாய்

*வினா எண். 179—திரு சோ. அழகர்சாமி: மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென் மாவட்டங்களில் அதிகமாக கிணற்றுப் பாசனங்களில் பயிராகும் மிளகாய்வத்தல் விலை குறைந்து விட்டது என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் இதனால் விவசாயிகளுக்கு ஏற்படும் நஷ்டத்தைப் போக்க அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: (அ) மற்றும் (ஆ): தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திரு. சோ. அழகர்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மிளகாய் வற்றல் விலை கொடுத்து வாங்குகிறவர்கள் கிலோ 15 ரூபாய் என்று வாங்குகிறார்கள். விவசாயிகள் விற்பனைக்கு கொண்டுவரும்போது கிலோ 5 ரூபாய் 6 ரூபாய்க்கு மேல் அவர்களுக்கு கிடைப்பது இல்லை. ஆகவே இதை கூட்டுறவு சூப்பர் மார்க்கெட் போன்ற நம்முடைய கூட்டுறவு அமைப்புகள் அல்லது கூட்டுறவு பெடரேஷன் மூலமாக நேரடியாக மொத்தமாக நியாயமான விலை கொடுத்து கொள்முதல் செய்து வருடம் பூராவும் பொதுமக்களுக்கு நியாயமான விலையில் கிடைப்பதற்கு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா? மேற்கொண்டு சிலோன் போன்ற நாடுகளுக்கு முன்னால் ஏற்றுமதி செய்வதன் மூலமாக நல்ல விலை விவசாயிகளுக்கு கிடைத்தது. இப்போது அந்த மாதிரி ஏற்றுமதிக்கு ஏதாவது ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு விற்பனை நிலையம், நுகர் பொருள் வாணிபக்கழகம், கூட்டுறவு இயக்கங்கள், ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் இவைகள் மூலமாகத்தான் பெரும்பாலும் இப்போது மிளகாய் வற்றல் கொள்முதல் செய்து அதன் மூலமாக விவசாயிகளுக்கு ஒரு கட்டுப்படியான விலை கிடைக்கக்கூடிய அளவுக்கு நிலைமையை அரசு உருவாக்கி வருகிறது. அந்த முயற்சி தொடர்ந்து நிச்சயமாக நடைபெறும். ஏற்றுமதி என்பது நமது தேவை, விளைச்சல் இவைகளை கருத்தில் கொண்டு நாம் கவனிக்க வேண்டும்.